# செய்தி அலசல்

செய்திகளின் ஆய்வுக்களம் மாத இதழ்

# SEIDHI ALASAL

TAMIL MONTHLY

ஏப்ரல் 2016 | மலர் - 1 இதழ் - 10 | விலை: ரூ. 25/-

April 2016 | volume - 1 Issue - 10 | Price Rs. 25/-








# செய்தி அலசல்
மாத இதழ்

**செய்திகளின் ஆய்வுக்களம்**

vol.1 ஏப்ரல் 2016 issue : 10



ஆசிரியர்
**S.இராஜேந்திரன்**

செய்தி ஆசிரியர்
**R.சாந்தகுமாரி**

இணை ஆசிரியர்கள்
**M.ஷர்மிளா J.ரஞ்சித்குமார்**

நிருபர்கள்
**M.ரூபன் R.அறிவழகன்**
**S. புவனேஸ்வரி**
**M.இராமகிருஷ்ணன்**
**S.பரசுராமன் G.சரவணன்**
**J.விநாயகம் (புதுவை)**
**T.குமரகுரு (விழுப்புரம்)**
**J.தீனதயாளன் (சேலம்)**
**P.வெங்கடேசன் (வேலூர்)**

புகைப்பட கலைஞர்
**H.துர்கா பிரசாத் R.சரவணன்**
**N.அசோக்குமார் (புதுவை)**

கௌரவ ஆலோசகர்
**நூலகபாலம்**
**Ln.K. முத்துலிங்கம் (TNPL ஓய்வு)**

சட்ட ஆலோசகர்கள்
**M.பாலசுப்ரமணியன் B.A.,B.L.,**
**R.ஹரிபாபு B.SC.,B.L.,**

இதழ் வடிவமைப்பு
**i Plus Creations**



அலுவலக முகவரி
**18,ஏவி.எம்.காலனி 5வது தெரு**
**விருகம்பாக்கம்,**
**சென்னை - 600 092.**
**9444104502, 9087955359**

மின்னஞ்சல்
**seidhialasal@gmail.com**



All rights of publication reserved. If any disputes, will have jurisdiction of chennai city courts only. News published in this magazine do not intend to defame any person dead or alive. The news are expressed in good faith in the interest of public


# ஆசிரியர் கடிதம்

நமது நாட்டின் முக்கிய பங்கு வகிப்பது ஊடகம் (News) வடக்கு தொடங்கி கிழக்கு மேற்கு என நான்கு திசைகளில் இருந்து காற்று அடிப்பது போல் நான்கு புரம் இருந்துவரும் செய்திகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு கொண்டு செல்லும் பெரும் பங்காற்றுகிறது, அச்சு ஊடகம், காட்சி ஊடகம் இரண்டும் நாட்டில் எந்த மூலையில் எது நடந்தாலும் உடனே நேரடியாக மக்களுக்கு கொண்டு போய் சேர்த்துவிடுகிறது, ஒருவரை நல்லவர் ஆக்குவதும் ஊடகம்தான் ஒருவர் தவறை உலகிற்கு தெரியப்படுத்துவதும் ஊடகம்தான். அதனால் தான் அதை நான்காவது தூண் என்று சொல்கிறார்கள். இதற்கு எந்த அரசும் பாதுகாப்பளிப்பதில்லை. பல அரசியல்வாதிகளால் தாக்கப்படுவதும், மறைமுகமாக மிரட்டப்படுவதும் வாடிக்கையாகவே உள்ளது. இதை தடுத்து நிறுத்த வேண்டும் என்றால் பெரிய மற்றும் சிறு நடுத்தர பத்திரிக்கையாளர்கள் ஒன்று கூட வேண்டும். அப்பொழுதுதான் நான்காவது தூண் ஜனநாயகத்தை காப்பாற்ற முடியும்.

இல்லையேல் இது போன்ற செயல்கள் தொடர்ந்து நடைபெற்று கொண்டுதான் இருக்கும். ஆகவே ஊடக நண்பர்கள் ஊடக முதலாளிகள் இதை உணர்ந்து விருப்பு வெருப்பின்றி ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க முன்வர வேண்டும் என்பதே என்னுடைய ஆசை, செய்வார்களா ஊடக முதலாளிகள்? ஊடக செய்தியாளர்கள்? பொருத்திருந்து பார்ப்போம்.

எஸ். இராஜேந்திரன்
**ஆசிரியர்**





# பணம் பறிமுதலில்

சட்டசபை தேர்தல் நடைபெறும், ஐந்து மாநிலங்களில் பணம் பறிமுதலில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கம், அசாம் ஆகிய மாநிலங்களில், ஏப்ரல் மற்றும் மே மாதம் தேர்தல் நடக்கிறது. இந்த மாநிலங்களில், வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருள் வழங்குவதை தடுக்க, தொகுதிக்கு, மூன்று பறக்கும் படை மற்றும் மூன்று கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுவினர், வாகன சோதனை நடத்தி, உரிய ஆவணங்கள் இல்லாமல், எடுத்து செல்லப்படும் பணத்தை பறி முதல் செய்கின்றனர்.

அந்த வகையில், அதிகபட்சமாக தமிழகத்தில், 7.44 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு அடுத்தப்படியாக, கேரளாவில் 2.97 கோடி ரூபாய்; மேற்கு வங்கத்தில் 53.10 லட்சம் ரூபாய்; அசாமில் 22.55 லட்சம் ரூபாய்; புதுச்சேரியில் 15 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

1.71 லட்சம் புகார்கள் பதிவு

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி அறிக்கை:

தமிழகம்





# தமிழகம் முதலிடம்



முழுவதும், சுவரில் எழுதி, பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாக, 41 ஆயிரத்து, 089 புகார்கள்; போஸ்டர் தொடர்பாக, 57 ஆயிரத்து, 412 புகார்கள்; பேனர் தொடர்பாக, 16 ஆயிரத்து, 755 புகார்கள்; இதர வகையில் என, மொத்தம், 1.71 லட்சம் புகார்கள் பெறப்பட்டன. இவற்றில் 75 ஆயிரத்து, 095 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, சுவற்றில் எழுதப்பட்ட வாசகங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

ஆவணங்கள் இல்லாமல் எடுத்து செல்லப்பட்ட, 7.83 கோடி ரூபாய் ரொக்கம், 33 ஆயிரத்து, 375 லிட்டர் மதுபானம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, 84 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

-G.சரவணன்

# வன்னியர் நிறைந்த கிராமங்களில் ராமதாஸ் தீவிர பிரசாரம்

**பா.ம.க.** நிறுவனர் ராமதாஸ், வன்னியர் அதிகம் உள்ள கிராமங்களில், வன்னிய வாக்கு ஈர்ப்பு பிரசாரத்தை தீவிரப்படுத்தி உள்ளார்.

பா.ம.க., நிறுவனர் ராமதாஸ், சட்டசபை தேர்தல் தேதி அறிவிக்கப்படும் முன், தாங்கள் தனித்து போட்டியிடுவதாக அறிவித்து, மகன் அன்புமணியை முதல்வர் வேட்பாளராக அறிவித்தார்.

அதை தொடர்ந்து, சென்னை, வண்டலூர் உள்ளிட்ட ஏழு நகரங்களில், மாநாடு நடத்தி அன்புமணி பிரசாரம் செய்தார். வன்னியர் பலமற்ற திருநெல்வேலியிலும், அத்தகைய பிரசாரம் நடைபெற்றது



குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, வன்னியர்கள் அதிகமாக உள்ள பகுதிகளில், வன்னியர் ஓட்டுகள் பா.ம.க., விற்கே பெறவும், ராமதாஸ்



களமிறங்கி உள்ளார்.
காஞ்சிபுரம் மாவட்ட தொகுதிகளில், வன்னியர்கள் அதிகமாக இருந்தும், அவர்கள் தி.மு.க. அ.தி.மு.க., தே.மு.தி.க., என, பல்வேறு கட்சிகளில் உள்ளனர்.
ஜாதிப்பற்று கொண்டவர்களே, பா.ம.க.விற்கு ஆதரவாக உள்ளனர். வன்னியர் நிறைந்த தொகுதிகளில், அக்கட்சி தனித்து போட்டியிட்டு வெல்வதில் சிக்கல் நீடித்து வருகிறது.
இத்தேர்தலில், தனித்து போட்டியிடும் அக்கட்சி, வன்னியர் ஓட்டுகளை, வழக்கம் போல் பிற கட்சிகளுக்கு சிதற விடாமல், தாங்களே கவரும் வகையில் செயல்பட்டு வருகிறது.



அதற்காக, ராமதாசும் களமிறங்கி உள்ளார்.
அவர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், நகர கூட்டங்களில் மட்டுமே பங்கேற்பது வழக்கம். தற்போது வன்னியர்கள் அதிகம் உள்ள கிராம கூட்டங்களிலும் பங்கேற்கின்றனர்.
சமீபத்தில் மாமல்லபுரம் அடுத்த, எச்சூர், கூடுவாஞ்சேரி அடுத்த மூலக்கழனி ஆகிய கிராம கூட்டங்களில், அவர் பங்கேற்றார்.
பா.ம.க., வென்றால் அளிக்கப்பட உள்ள, இலவச கல்வி, மருத்துவம், விவசாய இடுபொருட்கள், வேலை வாய்ப்பு, மதுவிலக்கு உள்ளிட்டவைகளை விளக்கி பேசிய அவர், வன்னியர்கள் பா.ம.க., வை ஆதரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**-S.இராஜேந்திரன்**

# கூடுதல் வாக்காளர் சேவை மையம்



**சென்னையில் வண்ண வாக்காளர் அடையாள அட்டை வழங்க வசதியாக, கூடுதலாக, 16 வாக்காளர் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**
**இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை:**
**சென்னையில், வண்ண வாக்காளர் அட்டை வழங்க வசதியாக, முதலில் மூன்று இடங்களில் வாக்காளர் சேவை மையங்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் கூட்டம் அலை மோதியது.**
**தற்போது கூடுதலாக, 16 மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அந்தந்த மண்டல அலுவலகங்களுக்கு உட்பட்ட தொகுதி மக்கள், மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் சேவை மையத்தை பயன்படுத்தி கொள்ளலாம்.**
**இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



# மோடி - மெகபூபா சந்திப்பு

-நமது சிறப்பு நிருபர்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், பி.டி.பி., பா.ஜ., கூட்டணி அரசு ஆட்சியில் இருந்தது. முதல்வராக இருந்த பி.டி.பி., தலைவர் முப்தி முகமது சயீது, ஜனவரியில் மரணமடைந்தார்.

அதைத் தொடர்ந்து கூட்டணி அரசு தொடர்வதில், இரு கட்சிகளும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் ஜனாதிபதி ஆட்சி அமலுக்கு வந்தது.

இந்நிலையில், ஏப்., 9ம் தேதிக்குள், புதிய அரசு அமையாவிட்டால், தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சட்டசபையின் ஆயுட்காலம் முடிவுக்கு வந்துவிடும். அதைத் தொடர்ந்து மீண்டும் அரசு அமைப்பது குறித்து இரு கட்சிகளுக்கும் இடையே, பல கட்டங்களாக பேச்சு நடந்து வருகிறது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை, பி.டி.பி., எனப்படும், மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் மெகபூபா முப்தி சயீது, சந்தித்து பேசினார்.

இதைத் தொடர்ந்து, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மீண்டும் கூட்டணி அரசு அமையும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

“பிரதமருடனான சந்திப்பு நம்பிக்கை ஏற்படுத்துவதாக உள்ளது. கட்சியின் எம்.எல்.ஏ.க்களுடன் ஆலோசனை நடத்தி, அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து அறிவிக்கப்படும்.” என, மெகபூபா தெரிவித்தார்.

# கவிதை

திறமை என்ற மூன்றெழுத்து - அது
வறுமையை போக்கும் உயிரெழுத்து
பொறாமை என்ற மூன்றெழுத்து - வாழ்வில்
பெருமையை இழக்கும் முதல் எழுத்து

படித்தும் சோம்பேறி ஆகி விட்டால் - நீ
பிடித்தம் இல்லாமல் போய்விட்டாய்
படிப்பைப் பாராமல் உழைத்து விட்டால் - உலகில்
படிப்படியாக நீ உயர்ந்து விட்டாய்

பட்டம் பதவி எல்லாமே - அவன்
இட்ட பிச்சை என்று சொல்வோமே
கெட்ட எண்ணம் இல்லாமே - அதை
கட்டிக்காத்து வாழ்வோமே

நாளும் வாழ்வு நிலை இல்லை - அதனால்
நாளைய வாழ்வும் புரியவில்லை
வாழ்வும் தாழ்வும் நமதில்லை - புரிந்து
வாழ்க்கையில் உழைப்பதில் தப்பில்லை.

எனக்கும் மேலே யாருண்டு - என்று
உனக்குள் இறுமாப்பு என்று ஒன்றுண்டு
அதற்கும் அர்தங்கள் பல உண்டு
எதற்கும் இறைவன் தீர்ப்பொன்று

-நாஞ்சில் இராமனாதன்

# துன்பம் இழைத்தவர்கள் தண்டனை பெற வேண்டும்

ஒரு ஊரில் ஒருவன் யாரையாவது பழிவாங்க வேண்டும் என நினைத்தான். அதற்கு ஒரு எண்ணம் தோன்றியது. பக்கத்து ஊருக்கு நடந்து செல்லும் வழியில் ஒரு மரத்தடியில் ஒரு சாமியார் உட்கார்ந்து இருந்தார். அவரிடம் சென்று சாமி, 'என்னை திட்டுகிறவர்களை எல்லாம் நான் பழி வாங்க வேண்டும் அதற்கு ஒரு யோசனை சொல்லுங்கள் சாமி' என்று கேட்டான். அதற்கு அந்த சாமியார் யோசித்தார், இவனுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்து நீ யாரை எல்லாம் பழி வாங்க நினைக்கிறாயோ அவர்கள் பெயரை எழுதி தினமும் காலையில் படித்துக் கொண்டு வா, பிறகு 1 மாதம் கழிந்து என்னை வந்து பார் என்றார். அவனும் தினமும் படித்து மனதில் பெரும் சுமையாக்கி விட்டான், தினமும் அவன் நினைப்பெல்லாம் யாரையாவது பழி வாங்க வேண்டும் என்றே இருந்தது. நாளாக, நாளாக அவன் மனரீதியாக மெண்டல் ஆகிவிட்டான். பிறகு ஒரு மாதம் கழித்து சாமியாரிடம் வந்தான். சாமியாரிடம், 'சாமி நான் நீங்கள் சொன்ன மாதிரி எழுதி படித்தேன். நான் தூங்கும் போது கூட அவர்கள் நினைவு தான் வருகிறது. என்னால் வேலைகளை பார்க்க கூட முடியவில்லை, இப்போ என்ன செய்வது என்று கேட்டான். அவனின் உரைப்படி சாமியார் சொன்னார், தவறு செய்பவர்கள் தானாகவே தண்டனையை அனுபவிப்பார்கள் நீங்கள் அதை எல்லாம் பொருட்படுத்தாது உங்கள் வேலையை மட்டும் பார்த்தால் நீ முன்னுக்கு வருவாய்' என்று அவருக்கு உணர்த்தினார். அப்பா என்று பெருமூச்சு விட்டான். அதன் பிறகு அவன் யாரையும் பழிவாங்க நினைப்பதில்லை. நன்றாக வேலை பார்க்கிறான், சம்பாதிக்கிறான்.

மனிதன் எதை நினைக்கிறானோ அது நடந்துவிடுகிறது. இது உதாரணம்.

-R.சாந்தகுமாரி



# மழை வருவதை தெரிவிக்கும் 'ஸ்மார்ட்' குடை



மழை வருவதை முன்கூட்டியே தெரிவிக்கும், 'ஸ்மார்ட்' குடையை, பிரான்ஸ் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

ஸ்மார்ட் போனின், ப்ளூ - டூத்துடன் இணைக்கப்பட்ட இந்த குடையில், ஒரு கேப்சூல் பொருத்தப்பட்டுள்ளது. அதில் உள்ள சென்சார், காற்றின் திசை, வேகம், வெப்பநிலை மற்றும் வெளிச்சம் ஆகியவை குறித்த தகவல்களை தெரிவிக்கிறது. 15 நிமிடங்களில் மழை வருமா, வராதா என்பதையும் இந்த குடை தெரிவிக்கிறது.

வெப்பநிலையின் அளவை பதிவு செய்யும் வகையில், இந்த ஸ்மார்ட் குடையின் மேல் பகுதியில் கேமரா பொருத்தப்பட்டுள்ளது; தண்ணீர் புகாதபடி தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மேற்பகுதி, பளபளப்பான பட்டு துணியால் தயாரிக்கப்பட்டுள்ளது. கன மழை, புயல் மற்றும் பனிப்புயலையும், இந்த ஸ்மார்ட் குடை தெரிவிக்கும் என்று, இதன் தயாரிப்பு நிறுவனம் கூறியுள்ளது.

-M.ஷர்மிளா

# ரூ. 10 லட்சம் மேல் வருவாய்

தமிழகத்தில், ஆண்டுக்கு, 10 லட்சம் ரூபாய்க்கு மேல் வருவாய் ஈட்டும், ஏழு லட்சம் பேருக்கு, சமையல் காஸ் சிலிண்டர் மானியம் ரத்தாக இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

பொதுத் துறையை சேர்ந்த இந்தியன் ஆயில், பாரத், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய எண்ணெய் நிறுவனங்களுக்கு, தமிழகத்தில், 1.62 கோடி சமையல் காஸ் சிலிண்டர் வாடிக்கையாளர் உள்ளனர்.

காஸ் சிலிண்டர் வினியோகத்தில் முறைகேட்டை தடுக்க, மத்திய அரசு, 2015 ஜனவரி மாதம், நேரடி மானிய திட்டத்தை அறிமுகம் செய்தது.

இத்திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர், சந்தை விலையில், காஸ் சிலிண்டர் வாங்க வேண்டும். பின், மானியத்தை, எண்ணெய் நிறுவனங்கள், வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கின்றன.

மத்திய அரசு, ஆண்டுக்கு, 10 லட்சம் ரூபாய்க்கு மேல், வருமானம் பெறுவோருக்கு, காஸ் மானியத்தை ரத்து செய்யப்போவதாக, 2015 இறுதியில் அறிவித்தது. ஆனால், அந்த விவரத்தை கண்டறிவதில், எண்ணெய் நிறுவனங்களுக்கு சிரமம் ஏற்பட்டது.

இந்த நிலையில், தமிழகத்தில், ஆண்டுக்கு, 10 லட்சம் ரூபாய்க்கு மேல் வருவாய் ஈட்டுவோர், ஏழு லட்சம் பேர் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து, எண்ணெய் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தமிழகத்தில், 30 லட்சம் பேர் வருமான வரி செலுத்துகின்றனர். அதில், ஏழு லட்சம் பேர், ஆண்டுக்கு, 10 லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுகின்றனர் என, மத்திய அரசின், சில



# 7 லட்சம் பேருக்கு மானியம் ரத்து?



துறைகளிடம் இருந்து, தகவல் கிடைத்துள்ளது.

இந்தவிவரம், அதிகாரப்பூர்வமாக கிடைக்காததால், மானியம் ரத்து செய்வது தாமதம் ஆகும். எனினும், இவர்களுக்கு மானியம் ரத்தாவது உறுதி.

தற்போது, புதிய காஸ் இணைப்பு கேட்டு வருவோரிடம் முகவரி, அடையாள சான்று கேட்பதுடன், கூடுதலாக வருமானம் விவரமும் கேட்டு பெறப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**-நமது சிறப்பு நிருபர்**






# புதுச்சேரியில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுருத்தி தேர்தல் அதிகாரி கந்தவேலு துவக்கி வைத்தார்.

**- J.விநாயகம் புதுவை**

வருகின்ற சட்டமன்ற தேர்தலில் புதுவையில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுருத்தி இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறைசார்பிலும் தேர்தல் துறைசார்பிலும் வாகனபேரணி நடைபெற்றது. பேரணியை புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரி கந்தவேல் துவக்கி வைத்தார். நேரு யுவகேந்திரா இளையோர் ஒருங்கிணைப்பாளர் சேஷாத்திரி தலைமை தாங்கினார். பேரணி எல்லப்பிளை சாவடியில் புறப்பட்டு மறைமலை அடிகள் சாலை அண்ணாசாலை, எஸ் வி படேல் சாலை, முத்தியால்பேட்டை வழியாக சோலை நகர் இளைஞர் விடுதியை அடைந்தது. இந்த பேரணி100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தியும் எங்கள் வாக்கு விற்பணைக்கு அல்ல என்பதை வலியுறுத்திம் வாக்களிப்பது நமது உரிமை, கடமை என்பதை வலியுறுத்தியும் 200 க்கு மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர். பேரணி வழி நெடுகிலும் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. பேரணி முடிவில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்து. இளையோர் பாராளுமன்றம் நடைபெற்றது. இதில் மன்ற தலைவர்கள் பங்கேற்று வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு குறித்து பேசினார். நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் பேசுகையில் புதுச்சேரி மாநிலத்தில் 100 சதவீத வாக்குப்பதிவு இலக்கை அடைவதற்கு இளைஞர் மன்றங்கள் தங்களுடைய பகுதிகளில் 100 சதவீத வாக்குப்பதிவு செய்ய முயற்சிக்க வேண்டும். இந்த முயற்சியை தன்னார்வ சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்ற இளைஞர்களுடன் இணைந்து 100 சதவீத வாக்குப்பதிவை இலக்கை அடைய வேண்டும். நமது வாக்கு வெறும் விற்பணைக்கு அல்ல என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். வாக்களிக்க வேண்டாம் என்று நினைப்பவர்கள் கட்டாயம் நோட்டா என்ற பட்டனை அழுத்தி கருத்தை பதிவு செய்யலாம். இந்த தேர்தலில் முதல்முறையாக நாம் யாருக்கு வாக்களிக்கின்றோம் என்பதை உறுதி செய்யும் வகையில் அதற்கான ஏற்பாடும் செய்யப் பட்டுள்ளது. முதல் முறையாக வேட்பாளர்கள் மட்டும் வாக்குப்பதிவு இயந்திரத்தில் பொறுத்தப்பட்டிருக்கும் எனவே வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வந்து நம் கடமையை ஆற்ற வேண்டும். வாக்களிப்பது நமது உரிமை, கடமை நமது வாக்கு விற்பனைக்கு அல்ல மறந்து விடாதீர்கள் 100 சதவீதம் வாக்குப்பதிவு நமது இலக்கு இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் சிப்பிகள் நற்பணி மன்ற தலைவர் புவரைகா, சிங்காரவேலர் இளைஞர் நற்பணி மன்ற தலைவர் பாவாடை உழைக்கும் மக்கள் இளைஞர் நற்பணி மன்ற தலைவர் வீரப்பன், வ.உ.சி மக்கள் நல மன்ற தலைவர் ராஜசேகர், பூரணக்குப்பம் கிராம வானொலி இளைஞர் நற்பணி மன்ற தலைவர் திருவேங்கடம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் அரசு கலை கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது. கல்லூரி முதல்வர் ரூப்சிங் தலைமை தாங்கினார்.
துறை தலைவர்கள் முத்துலட்சுமி, சேகர், கலியமூர்த்தி, மணி, கணேசன், ரவிசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேலூர் திருவள்ளுவர் பல்கலைழக்கழக பதிவாளர் அமுல்தாஸ் கலந்து கொண்டு, இறுதி ஆண்டு முடித்த அனைத்து துறைகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் 600 பேருக்கு பட்டம் வழங்கினார். பல்கலைக்கழக அளவில் தர வரிசையில் இடம் பிடித்த மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகளை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில், கல்லூரி பேராசிரியர்கள், பேராசிரியைகள், பெற்றோர்கள் மற்றும் கல்லூரி ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

- T.குமரகுரு





திருக்காட்டூர்
அருள் மிகு தையல் நாயகி உடனுறை ஸ்ரீ உத்திர வைத்தியலிங்கேஸ்வரர் ஆலயம்.
நிகழும் மங்களகரமான 1191-ம் ஆண்டு துன்முகி வருடம் சித்திரை மாதம் 7-ஆம் தேதி 20-04-2016 புதன் கிழமை ஹஸ்த நட்சத்திரம் கூடிய சுபதினத்தில், காலை 9.00 மணிக்குமேல் 10.00 மணிக்குள் சுவாமி அம்பாள் விமானத்திற்கும், பரிவார மூர்த்திகளுக்கும், கிராம தேவதை ஸ்ரீ செல்வியம்மன் விமானத்திற்கும். வருஷாபிஷேகமானது எல்லாம் வல்ல நம் அம்மையப்பனின் பெருங்கருணையால் நடைபெற உள்ளது. அடியார் பெருமக்கள் அனைவரும் வருகை தந்து அம்மையப்பனின் அருட்செல்வம் பெற அவர்தான் விணங்கி அன்புடன் அழைக்கின்றோம்.

இங்கனம்

அருணாச்சல் டிரஸ்ட்
ஆலய நிர்வாகிகள்
மற்றும் காட்டூர் கிராம மக்கள்



K. முத்துலிங்கம் அவர்களுக்கு அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் சங்கத்தின் முப்பெரும் விழாவில் தேசிய தலைவர் டாக்டர் S.இராஜேந்திரன் மற்றும் மேலான் நீதியரசர் டாக்டர் S.சம்மந்தம் அவர்களால் விருது வழங்கப்பட்டது